

கோவை ஆர்ய வைத்திய பார்மசியில் நடந்த அன்னையர் தின விழாவில், தசை சிதைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

# ஆர்ய வைத்திய பார்மசியில் அன்னையர் தின விழா

**கோவை, மே 30**

கோவை ராமநாதபுரம் ஆர்ய வைத்திய பார்மசி கூட்ட அரங்கில், எம்டிசிஆர்சி என்ற தன்னார்வ அமைப்பு சார்பில் அன்னையர் தின விழா அதன் தலைவர் டாக்டர் பி.ஆர். கட்டாரி முன்னிலையில் நடந்தது.

விழாவில் பிரபல பேச்சாளர் ஜெயந்த் ஸ்ரீபாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார்.

முன்னதாக டாக்டர் பி.ஆர்.கட்டாரி வரவேற்று பேசியதாவது:

உலகம் முழுவதும் 3300 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. இந்த நோய் மரபு வழியாக வருவதாக டாக்டர்கள் கண்டுபிடித்துள்ளனர். பெரும்பாலும் ஆண் குழந்தைகளுக்குத்தான் இது அதிகம் ஏற்படுகிறது.

இதற்காக எம்டிசிஆர்சி என்ற தன்னார்வ அமைப்பு பல்வேறு நோக்கங்களோடு செயல்பட்டு வருகிறது. தமிழக அரசுடன் இணைந்து இந்த நோய்க்கான சிகிச்சை அளித்து வருகிறோம்.

டூசின் தசை சிதைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பத்துக்கு 12 ஆண்டுகளாக சேவையாற்றி வருகிறது. நாம் கற்ற அறிவியலை சமுதாயத்தை சென்றடைய செய்வதே எங்கள் நோக்கமாகும்.

எம்டிசிஆர்சி தனது குடும்ப ஆதரவு சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மையம் மூலமாக குழந்தைகளின் வாழ்க்கை தரம் முன்னேற்றத்துக்காக பாடுபட்டு வருகிறது. மரபணு பரிசோதனை கலந்தாய்வு, பல்துறை மருத்துவ முகாம், குடும்ப ஆதரவு சேவைகள் அனைத்தும் இங்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து அன்னையருக்கான விளையாட்டு போட்டிகள் நிகழ்ச்சிகள், திறன் வெளிப்படுத்தும் போட்டிகள் நடந்தன.

குடிசி மருத்துவமனை தலைவர் தேசிராமசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.